**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**செய்தி வெளியீடு எண்.** 144/2025 **நாள்** 23.10.2025

**செய்தி வெளியீடு**

தேர்வாணையத்தால் 20.07.2025 மு.ப. & பி.ப. முதல் 22.07.2025 மு.ப. & பி.ப. வரை நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு பதவிகள்) (**அறிவிக்கை எண்** 08/2025) மற்றும் 04.08.2025 முதல் 10.08.2025 நடைபெற்ற ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) (**அறிவிக்கை எண்** 09/2025) - **க்கான** விடைத்தாள்கள்(கணினி வழித் தேர்வு), சில தேர்வர்களின் கோரிக்கைக்கு இணங்க தேர்வாணைய இணையதளத்தில் 23.10.2025 அன்று மறு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. விருப்பப்படும் தேர்வர்கள், தங்களுடைய ஒருமுறை பதிவு எண் வாயிலாக விடைத்தாளினை உரிய கட்டணம் செலுத்தி பதிவிறக்கம் (**பதிவிறக்கம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள காலம் 23.10.2025 முதல் 21.11.2025 வரை**) செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேற்குறிப்பிட்டுள்ள தேர்வுகள் தொடர்பான விடைத்தாள்களை (கணினி வழித் தேர்வு) வழங்கக் கோரி, அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு பிறகு பெறப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட மாட்டாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**அ. சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,**
**தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்**